**ஒபெக் நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் - 2022**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக இருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நரஹேன்பிட்டிய – நுகெகொட பாலத்தை மீளநிர்மாணித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,212.37 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 86.25 மில்லியனானதுடன் அதில் ரூபா 6,499.57 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 பெப்ரவரி 29 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் இறுதி நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்பட வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய நாணயமாற்று சமநிலை சீராக்கங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 7,179 | உண்மையான பணவளிப்பு தொகையை நாங்கள் பதிவு செய்துள்ளோம், மேலும் வெளிநாட்டுக் கடனைப் பதிவுசெய்வதற்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாணயமாற்று விகிதத்தை நாங்கள் கருத்தில் கொண்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை கடைபிடித்தல். |
| (ii) | மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் மொத்த பணவளிப்புத் தொகை ரூபா 608 மில்லியனாக இருந்த போதிலும், அது ரூபா 1,067 மில்லியனாக காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | 608 | 2022 ஆம் ஆண்டுக்கான மொத்த பணவளிப்பு ரூபா 607.85 மில்லியனாகும். எனினும், செயற்திட்டமானது முந்தைய ஆண்டுகளின் பணவளிப்புக்களுடன் ரூபா 1,067.16 மில்லியனை காட்டியிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை கடைபிடித்தல். |
| (iii) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் மொத்த பணவளிப்பு ரூபா 542 மில்லியனாக இருந்த போதிலும், இது நிதிக்கூற்றில் ரூபா 608 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்ததால் ரூபா 66 மில்லியன் வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 66 | ERD மூலம் கொடுப்பனவுகளிற்காக இதுபோன்ற IPCs ஐ நாங்கள் வழங்கியிருந்ததால், ரூபா 65.88 மில்லியன் வெளிநாட்டு உதவி பெறவேண்டியவைகளாகக் காட்டப்பட்டுள்ளது. | ERD அறிக்கைகள் மற்றும் அரச கணக்குகள் ஆகியவற்றை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | ரூபா 1.16 மில்லியன் பெறுமதியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட 11 கணனிகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 65 | 1.16 | இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 65 ஆம் பிரிவின் பிரகாரம் பிழையை திருத்துவதற்கு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை கடைபிடித்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பிழையை திருதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (v) | செயற்திட்டத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - | இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை கடைபிடித்தல். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| **விபரம்** | **தொகை ரூபா. மில்லியன்** | **தீர்க்கப்படாத காலப்பகுதி** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 முதல் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட விளம்பரம், அளவை வேலை, மண்சரிவு ஆய்வு, நடைபாதை வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆலோசனைச் செலவினங்கள் தொடர்பான ரூபா 15 மில்லியன் கூட்டுமொத்தமான 03 பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு செயற்திட்டம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | 15 | 1 முதல் 2 ஆண்டுகள் | போதுமான கட்டுநிதி கிடைத்தவுடன், குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களில் இருந்து பெறவேண்டியவைகள் பெறப்படும். | இனியும் தாமதிக்காமல், பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| **கூறு** | **செயற்பாடு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | | |
| ஒருகொடவத்தை வீதி த-அம்பத்தளை நிர்மாணம் வீதி (நிலை-01) | | 100% | 84 | உரிய வீதிகளின் உண்மையான முன்னேற்றம் திட்டமிடப்பட்ட முன்னேற்றத்திற்குப் பின்தங்கியிருந்தது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயற்பாடு மற்றும் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளில் தாமதம். |
| (நிலை-02) | | 100% | 79% | | |

**முகாமைத்துவத்தின் பதில்** இணங்கப்பட்டது.
ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் மற்றும் காணி சுவீகரிப்பு மற்றும் பயன்பாட்டு இடநகர்வு (utility shifting) போன்ற ஏனைய செயற்பாடுகளும் செயற்திட்ட தாமதத்திற்கு பங்களிக்கின்றன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வீதி நிர்மாணப் பணிகளை பட்டியலிடப்பட்ட திகதிகளுக்குள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 மார்ச் 07 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின் மூலம் பிலியந்தலை முதல் மஹரகம வரையிலான வீதியை மேம்படுத்துவதற்காக கேள்வி கோரப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 வரை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் அந்தத் தாமதத்தை முக்கியமாகப் பாதித்தது. | கேள்விதாரர் ஒருவர் கேள்வியை வழங்குவதற்கு எதிராக FR வழக்கை தொடர்ந்துள்ளார், அதுவே கேள்வி வழங்கலில் உள்ள தாமதத்திற்கு முக்கிய காரணமாகும். | பட்டியலிட்டவாறு சிவில் பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கிடைத்த தகவலின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக 962 அரச காணித்துண்டுகள் உட்பட 5,717 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நட்டஈடுகளை தீர்ப்பனவு செய்வதில் உள்ள தாமதம் காரணமாக ரூபா 2,192 மில்லியன் வட்டியுடன் சேர்த்து ரூபா 12,275 மில்லியன் தொகையான நட்டஈடு 4,410 காணித்துண்டுகளிற்காக செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 514 காணித்துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இது செயற்திட்டத்தின் செயலாற்றலை மோசமாகப் பாதிக்கலாம். | காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் பதிவு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களால் (DSS) மேற்கொள்ளப்படுகிறது. DS அலுவலகத்தில் பதிவு செய்வதில் தாமதம் காணப்படுகின்றதுடன் அதை பூர்த்தி செய்வதற்கு பல நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடன் மற்றும் GOSL கூறின் கீழ் முறையே ரூபா 1,150 மில்லியன் மற்றும் ரூபா 585 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் மோசமான முன்னேற்றம் காரணமாக 7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 83 மில்லியன் வெளிநாட்டுக் கடன் ஒதுக்கீடு மற்றும் 79 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 465 மில்லியன் GOSL ஒதுக்கீடு என்பன செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | GOSL கூறின் கீழ் போதுமான கட்டுநிதி பெறப்படவில்லை. எனவே GOSL ஒதுக்கீட்டில் 79% பயன்படுத்தப்படவில்லை. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடத்தின் 1வது தளத்தில் ஏழு செயற்திட்ட அலுவலகங்கள் இயங்கி வந்த போதிலும், இந்த ஏழு செயற்திட்டங்களுக்கும் நியாயமான முறையில் கட்டிட வாடகை பங்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே செயற்திட்டமானது மீளாய்வாண்டிற்காக முழுக் கட்டிடத்திற்கும் ரூபா 3.16 மில்லியன் தொகையான 03 மாத வாடகையை செலுத்தியிருந்தது. | இணங்கப்பட்டது. | ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் வாடகை அறவீடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |